


பாகம் 1

எதற்காக தேவன்,

ஜீவ விருட்சமான அன்பையும், நன்மை-தீமை கனியான ஆசையையும்,

ஏதேனில் நாட்டினார்?

மனிதன் தேவனைப்போலவே, நித்திய காலமாக,

சாவாமையின் சரீரத்தில், தன்னை உருவாக்கிய,

பரம தந்தையை, அன்புடன் ஆராதிக்க

வேண்டும் என்பதற்காக;

ஆராதனையென்பது அவர் சொல் கேட்பது.

அன்றியும் மனிதனோ, நித்திய மரணத்தின் ஆசை
சொல் கேட்டு இவ்வுலகில் மரணமானானே!

தேவனைத் துதித்தால் ஜீவனையும், சுய புராணம்
பாடினால், மரணத்தையுமடைவாய் என்பதன் அடையாளமே
இரண்டு மரங்களும் அருகருகே, தோட்டத்தின் நடுவிலே
வைக்கப்பட்டதின் ரகசியம்.
மூச்சையும் பேச்சையும் இலவசமாய் கொடுத்த இறைவனைப்
போல, மாற வேண்டும் என்று, மனிதனுக்கு கற்றுத்தந்தவன்
யார்?
நித்தியமரணத்திற்கு சொந்தக்காரணல்லவா!
தேவனுக்கு சத்துருவாகிப்போன மாயவன்.

மரணத்தை தம் மரணத்தால் வென்றார் தேவன்;
எப்படி?
மனிதனிடம் தேவன் தந்தது உலக அதிகாரமே;
அதை மாயவன் திருடியது பாம்பின் தந்திரமே;
தம் பிள்ளைகளாம் நம்மெல்லாருக்கும் -நித்திய
வாழ்வளிக்க, சிருஷ்டிகர் யெகோவா
தாழ்மையில் எடுத்தது இயேசு உருவமே - அவர்
ஒருவரே, உலக பாவத்தின் பரிகாரமே.

மனிதன் தெய்வமாக நினைத்து, அழிந்ததுதான் மரணம்;
தேவன் மனிதனாக அவதரித்து, அந்த பாவிக்களித்தது
நித்திய ஜீவன்;
மனித உள்ளத்திலே உண்மையை வைத்தவர் இறைவன்,

மகன்-தந்தை உரிமையுடன்;

அந்தோ!

மனிதன் பொய்யைக் கடன் வாங்கினான் - புரியாமல்

பகையுடன் வந்த பங்காளியிடம்.

கீழ்ப்படியாமையால் நீதீயை இழந்து பாவமானான்

மனிதன், ஏதேன் தோட்டத்தில்;

அந்த பாவத்தின் சாபத்தை, கெத்சமனே பூங்காவினில்,

இயேசுதாமே தேவ சித்தமாக ஏற்றுக்கொண்டார்.

மனிதன், நன்மை-தீமை தேடியதால் பெற்றது மரணம்;

இயேசு நன்மையாய் வாழ்ந்ததால் - மறுபடியும்

கிடைத்தது நித்தியஜீவன்.

ஏதேன் தோட்டத்தில் பணி செய்து, என்றும் ஜீவனோடு

வாழ்ந்திருக்க கட்டளை கொடுத்தார் தேவன் அன்று;

என் அன்பிலே நித்தியமாய் இளைப்பாறுங்கள் என்று,

தமது இரக்கத்திலே இயேசு அழைக்கின்றார், கெத்சமனே

பூங்காவினில் இன்று.

இயேசு பெருமான், தீமையை அதாவது சாத்தானை,

நன்மையால் வென்றது எதற்காக?

தமது சிலுவை மரணத்தால் அந்த நித்தியமரணத்தை

தோற்க்கடித்தது நமக்காகத்தானே;

அவருக்கு உள்ளத்திலே குடியுரிமையளித்தால்,

செழிக்கப்போவது நம் வாழ்வுதானே,

பாவ-சாப நோயின்றி இவ்வுலகிலே.




பாகம் 2

எத்தனை துன்பங்கள், எத்தனை துயரங்கள்,

எத்தனை பாடுகள், எத்தனை நாட்கள்,

எத்தனை மாதங்கள், எத்தனை வருடங்கள்;

தூக்கமே ஏக்கமாய் போனதே, நம்மில் பலருக்கும்;

அதனால் வாழ்க்கையே கசப்பாய் ஆனதே.

பிறந்தோம் சாபத்தில், வளர்ந்தோம் பாவத்தில்;

இருதயக்குருடால், வந்த தீமையின் மாயையால்,

மரணத்தீயினில் எரிந்திட, நாள்தோறும்

நடத்துகின்றோம் இச்சையின் அரங்கேற்றம்;

சில நேரங்களில், அது உலக இயற்கையையும்

மீறிய சீற்றம்.

வாடகைக்கு (உடலை) விட்டிடவா வடிவமைத்தார்

இறைவன் நம்மை;

எத்தனை மாட்சிமை பொருந்திய சரீரத்தை - வீழ்ந்த

மனிதனின் (முதல்) கடனுக்கு வட்டியாக கொடுத்திடலாமா?

ஐயோ!

இந்த கடன்காரன் (சாத்தான்) தொல்லைக்கு என்ன

செய்திடலாம்?

அடிமை சாசனம் எழுதினான் வீழ்ந்த ஆதாம்,

ஏதேன் தோட்டத்தில்;

தேவன் அதை நம் உரிமை சாசனமாய் மாற்றினாரே,

ஜெயித்த இயேசுவின் மூலம்,

கெத்சமனே பூங்காவினில்.

இது எப்படியானது?

கண்கள் பார்த்திட கல்வாரியில் தொங்கினார்;

செவிகள் கேட்டிட திருவசனங்கள் கூறினார்;

இருதயம் நொறுங்கிட இரத்தத்தை சிந்தினார்;

ஐயோ!

நம் ஆண்டவர் உடலே ரணமாய்த்தொங்க - அவரோ

துன்பத்தின் எல்லையில்,

நாமோ இன்றும் கூட சிற்றின்ப மாயையில்.

மிருகத்துடன் (பிசாசு) இணைந்து, மனிதன் இழந்தது

தேவ மகிமையை;

நாம் இழந்ததை கொடுத்திட இயேசுவானார் இறைவன்;

முடிவு, கொல்கதா மலையின்மேலே, கோரச்சிலுவையிலே,

இரத்த வெள்ளத்திலே, நம்மை சுத்தம்செய்யவே:

உலக பாவத்தின் சுமையை ஏற்றவரை- அழைப்போமா

நம் உள்ளத்தில் இளைப்பாறிடவே.

ஆதித்தாய் மற்றும் தந்தையிடம் - தேவன்

அவர்களது சந்ததியை உருவாக்கும்,

உரிமையை கொடுத்திருந்தார் உலகத்தில்;

சர்ப்பத்தையும் (சாத்தானை) சேர்த்து ஆளும்

அதிகாரத்தையும் பெற்றிருந்தினர் முதல் குடும்பத்தினர்.

ஏவாளிடம்,

அறிவுக்குப்பஞ்சம், அது அகந்தை நெஞ்சத்தால் வந்த

சொந்தம்;

கண நேரமாகியிருக்குமா, கணவனை அழைத்திருக்க;

ஏதேனில் ஆரம்பித்த அகங்காரம், இன்றுமட்டும்

தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது, பல குடும்பங்களில்.

அவள் மிருகத்துக்கு (சாத்தானுக்கு) கீழ்ப்படிந்து -தேவனுக்கு

கீழ்ப்படியாமல் போனதினால்,

நன்மையை (தேவ வார்த்தையை) பெற்றெடுக்காமல், பாவத்தை

பத்துமாதம் சுமக்கும் சுமைதாங்கியாகிப்போனாள்.

முதல் தாய் ஏமாந்தது ஒரு பிசாசினால்;

ஆனால் மனிதனோ வஞ்சிக்கப்பட்டது, இரண்டு

பிசாசுகளினால் (சாத்தான், ஏவாள்) - இதுதான்

பாவப்பெருக்கலோ?.

அநீதி உள்ளத்தில் பிறந்ததும், துக்கத்தில் இருந்தார்களோ!

இல்லை, தூக்கத்தில் நிறைந்தார்களோ!

தேவனை மறந்தார்கள், பாவத்தீயினில் விழுந்தார்கள்.

துணைக்கு ஏங்கின ஆதாமின் உள்ளம் பாவமானதால்,

துணைவியையே காட்டிக்கொடுத்தான்;

அதுமட்டுமா,

தேவனையும் சேர்த்து குற்றப்படுத்தினான் ஏதேனில்.

இருதயத்தை வாசிக்கும் இறைவன், ஏற்ற துணையைத்தான்

கொடுத்திருந்தார்;

பரம தந்தையை காட்டிலும், ஆதாம் மனைவியை

நேசித்ததால், அவளைப்போல மாறினான், அவசரத்தில்.

ஏவாள், ஆதாம் உடலின் 'குளோனிங்', படைப்பின்

நாளிலே;

அந்தோ!

கீழ்ப்படியாமையின் நேரத்திலே, ஆதாம்,

அவள் பாவ மனதின், 'ஜெராக்ஸ்' ஆனானே.

காட்டிக்கொடுக்கும் வழக்கத்தை சாத்தானிடம்

கற்றவர்கள் மனிதர்கள் ஏதேனில்;

பார்த்தீர்களா!

அவர்களது வாரிசு, யூதாசை,

தேவ குமாரனையே, காட்டிக்கொடுத்த காட்சியை,

கெத்சமனே பூங்காவினில்.

மனிதன் பெயர் சூட்டினதால்,

சர்ப்பம் அவனிடம் வரவில்லை;

இதுதான் அதின் தந்திரமோ!

தேவ திட்டத்தை நிறைவேற்றும் பயணத்தில், ஏவாளின்

பங்கு மிகப்பெரியது;

ஆமாம்,

தேவ பிள்ளையான ஆதாமை நெருங்க முடியாத சத்துருவை,

அவனுக்கு வெளிப்படுத்தும் உன்னத பணி.

எப்படி?

சத்துருவின் யோசனை மனதில் விழுந்தவுடனே, அழைக்க

வேண்டியது கணவனைத்தான்; ஆசையையல்ல!

மனைவி அழைத்தவுடன், ஆதாம் ஜெபிக்க வேண்டியது

பரம தந்தையிடம்தான்; ஏவாளிடமல்ல!

அப்படி நடந்திருந்தால், எதற்கு நமக்கு இத்தனை வேதனைகள்?

ஏவாள் ஏமாறப்பிறந்தவளோ?

இல்லை, ஆசைக்குப்பலியானாளோ!

எப்படியோ, இன்று அவளுக்கும் ஒரு கூட்டம் ஆராதனை

செய்கிறதே!

சர்ப்பத்திற்கு பல நாள் பழக்கம் இருளிடம் (சாத்தானிடம்);

அதனால் பெருமையில் விழுந்தது விடிவெள்ளி மகனிடம்;

இரவிலே விழுந்ததால்தானோ, இருளிலேயே இன்றும்

இறைதேடுகின்றது!

எஜமானர்கள் ஆதாமும் - ஏவாளும் இருக்க, வாடகைக்கு

உடலை கொடுத்து, மனித வர்க்கத்தையே ஏமாற்றிவிட்டது.

அதனால்தானோ, அது இன்றும் வாடகை வீட்டிலேயே

குடியிருக்கின்றது.

தேவ மகிமையில் உருவான மனிதர்கள், இழந்தது,

அவரது அன்பை மாத்திரமல்ல, உண்மையையும்

சேர்த்துதான்;

அதனால்தான்,

கணவன் மனைவியையும், மனைவி மிருகத்தையும் (சர்ப்பத்தை)

காரணமாக்கினார்கள், தங்கள் கீழ்ப்படியாமைக்கு.

இருள் சூழ்ந்த காலத்தில், மனிதன் பாவத்தின் அடிமை;

கிருபையின் காலத்தில், இயேசுவின் அன்பிலே, இலவசமாக

அளிக்கப்பட்டுள்ளது, நித்திய ஜீவனின் மகிமை;

அந்த இயேசுவை நோக்கிப்பார்ப்போமா!

ஏதேனை விட்டு வெளியேறினோம், அசுத்தமாக;

கெத்சமனேக்குள்ளே நுழைவோம், பரிசுத்தமாக.

இயேசுவின் இரத்தம் பாவம் போக்கும் மருந்து;

சுத்தமாகும் இதயத்தின் விருந்து;

விட்டுவிலகுவோம் தீமையின் இருப்பிடத்தை;

கட்டி எழுப்புவோம் தேவ ஆலயமாய் நம் சரீரத்தை.

ஏதேன் தோட்டம் இன்பமானது - ஆனால்

கீழ்ப்படியாமையினாலே தூரமானது;

கெத்சமனே பூங்கா, பாடுகளின் பாதையானது;

ஆனால் சிலுவை மரணமோ, கீழ்ப்படிதலின்

அடையாளமானது- அதுவே

நமக்கு நித்தியஜீவனானது.

**இயேசுவின் குடும்பம் ஊழியங்கள்**

**பெங்களூர்**